### வளர்ச்சிப்பாதையில் செல்லும் தமிழ்நாட்டில் - சூழ்ச்சிகள் மூலமாக காலடி எடுத்து வைக்கத் துடிக்கும்

# பாசிஸ்ட்டுகளையும் - அவர்களின் அடிமைகளையும் வீழ்த்த அடுத்துவரும் ஒவ்வொரு நாளும் ஓரணியில் நின்று உழைப்போம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டம் – செஞ்சி தொகுதி கழக மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

செஞ்சி, டிச.7-

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்தித்து வருகிறார்.**

**அந்த வகையில், நேற்று முன்தினம் (5.12.2025) விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில், செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கான கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பூத் கமிட்டி நிர்வாகிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.**

**அக்கூட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், "வளர்ச்சிப் பாதையில் செல்லும் தமிழ்நாட்டில், சூழ்ச்சிகள் மூலமாக காலடி எடுத்து வைக்க துடிக்கும் பாசிஸ்டுகளையும் அவர்களின் அடிமைகளையும் வீழ்த்த, அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் ஓரணியில் நின்று உழைப்போம் ; 2026இல் 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம்" எனச் சூளுரைத்தார்.**

இக்கூட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்களாகிய உங்களை எல்லாம் இந்த மாலைவேளையில் சந்தித்து, உங்களோடு உரையாற்றுகின்ற இந்த வாய்ப்பைக் கொடுத்த மாவட்டக் கழகச் செயலாளர் மஸ்தான் அவர்களுக்கு முதலில் என்னுடைய பாராட்டுகள், பிறகு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதல் நிகழ்ச்சி!**

நேற்று காலை சென்னையிலிருந்து பயணத்தைத் தொடங்கினேன். காலை விருதுநகர் வரைக்கும் சென்றுவிட்டு, அங்கிருந்து உடனே திரும்பி திருவண்ணாமலைக்கு வந்து, நேற்று மதியத்திலிருந்து இன்று மதியம் வரை திருவண்ணாமலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இப்போது விழுப்புரம் வடக்கு மாவட்டத்துக்குள் நுழைந்து இன்றைக்கு முதல் நிகழ்ச்சியாக செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்திருக்கிறேன்.

முதலமைச்சரின் உத்தரவுக்கு இணங்க, கழகத் தலைவரின் கட்டளையின்படி அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் நேராகச் சென்று அங்கு இருக்கக்கூடிய கழகத்தின் அனைத்து நிர்வாகிகளையும் சந்திக்கின்ற இந்த வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

14வது தொகுதியாக இன்றைக்கு இந்த செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்திருக்கிறேன். தொடர் நிகழ்ச்சிகள் இருந்ததினால், தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பதால், வரும்போது நீங்கள் பார்த்திருப்பீர்கள், கொஞ்சம் சோர்வாகத்தான் வந்தேன். ஆனால், இங்கு வந்து உங்களுடைய சிரித்த முகத்தையும், எழுச்சியான அன்பையும், ஆரவாரத்தையும், பாசத்தையும் பார்க்கும் பொழுது உங்களுக்குள் இருக்கக்கூடிய அந்த உணர்ச்சி, எழுச்சி எனக்கும் தொற்றிக் கொண்டிருக்கிறது.

**வென்ற ஒரே தலைவர்**

செஞ்சிக் கோட்டை எப்படி வலிமையாக இருக்கிறதோ, அதே மாதிரி செஞ்சியும் தி.மு.கவின் கோட்டை என்பதை இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள் தொடர்ந்து அதை உறுதிசெய்து வருகிறீர்கள். சில நேரங்களில் இந்த செஞ்சி, எதிர்க்கட்சிகள் வசம் சென்றிருந்தாலும், எதிரிகளிடம் இருந்து அதை சீக்கிரமாக மீட்கக்கூடிய, அந்தக் கோட்டையை மீட்கக்கூடிய உடன்பிறப்புகள்தான் இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி பேசும்போது, நாம் பெருமையாகப் பேசுவோம். தான் நின்ற தேர்தல்கள் எல்லாம் வென்ற ஒரே தலைவர் கலைஞர் என்று நாம் அத்தனை பேரும் பெருமையாகப் பேசுவோம். கலைஞரைப் பற்றி பேசும்போது அப்படிச் சொல்வோம்.





நம்முடைய தலைவரைப் பற்றி பேசும்போது சொல்வோம். தான் தலைவராகப் பொறுப்பேற்று இந்த இயக்கம் சந்தித்த அத்தனை தேர்தலிலும் வெற்றி பெற்ற ஒரே தலைவர் நம்முடைய தலைவர் என்ற பெருமை நம்முடைய தலைவருக்கு உண்டு.

கலைஞரைப் பற்றி பெருமையாகப் பேசுகிறோம், தலைவரைப் பற்றியும் பெருமையாகப் பேசுகிறோம், இயக்கத்தைப் பற்றி பெருமையாகப் பேசுகிறோம் என்றால், அதற்கெல்லாம் முழுக்காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள்தான்.

நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் இல்லை, நம்முடைய தலைவர் இல்லை, நீங்கள் இல்லாமல் நம்முடைய திராவிட மாடல் அரசு இல்லை.



கழகத்தின் அடித்தளமே நீங்கள்தான். அதனால்தான் இன்றைக்கு இவ்வளவு எழுச்சியோடு கூடி இருக்கிறீர்கள். மூன்று நாட்களுக்கு முன்புதான் இந்த நிகழ்ச்சி உறுதி செய்யப்பட்டது. அதுவும் தொடர்ந்து மழை. சென்னையிலும் மழை. பல்வேறு மாவட்டங்களிலும் மழை. இந்த மாவட்டத்திலும் தொடர்ந்து மழை.

**சிறப்பான ஏற்பாடுகள்!**

இந்தக் குறுகிய கால அறிவிப்பில் இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இவ்வளவு எழுச்சியோடு இந்த நிகழ்ச்சி நடக்கிறது என்றால், இந்த விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உண்டான அந்தப் பெருமை இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள்தான்.

நம்முடைய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் பவள விழாவைக் கொண்டாடியது. இளைஞர் அணி சார்பாக தி.மு.க. 75 அறிவித் திருவிழாவைக் கொண்டாடினோம். கிட்டத்தட்ட ஒன்பது நாட்கள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடினோம். இன்றைக்கு 76வது வருடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிநடை போட்டு சென்றுகொண்டிருக்கிறது.

இந்த 76 வருடத்தில் எத்தனையோ போராட்டங்கள், எத்தனையோ தியாகங்கள், எத்தனையோ நெருக்கடிகள், எத்தனையோ நெருப்பாறுகளைக் கடந்து திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு நடை போட்டுக்கொண்டிருக்கிறது. இத்தனை வருடத்துக்குப் பிறகும், இத்தனை போராட்டங்களுக்குப் பிறகும் நம்முடைய இயக்கம், நம்முடைய கழகம் இன்றைக்கும் அவ்வளவு வலிமையோடும், இளமையோடும் நடைபோட்டு கொண்டு இருக்கிறது என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள் நீங்கள்தான் அதற்கு முழுக் காரணம்.

**திராவிட மாடல் அரசு !**

குறிப்பாக 2021 சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால், நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்தது என்றால், அதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய உங்களுடைய உழைப்புதான் மிக மிக முக்கியமான காரணம். அதனால்தான் இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கிற மாதிரி ஒரு திராவிட மாடல் அரசை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

ஆட்சிக்கு வந்தவுடன், நம்முடைய தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன வாக்குறுதி. முதல் நாள் ஐந்து கையெழுத்துப் போட்டார். அதில் முதல் கையெழுத்து மகளிருக்கான அந்த விடியல் பயணத் திட்டம்தான் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் போட்ட முதல் கையெழுத்து. அந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் மகளிர் 850 கோடி முறை பயணம் செய்திருக்கிறார்கள். இதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. குறிப்பாக இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 13 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள்.

**காலை உணவுத் திட்டம்!**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்த முதலமைச்சர் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் 57,000 குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

சமீபத்தில் இந்தத் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளில் விரிவாக்கம் செய்தார்கள். அப்போது அந்த நிகழ்ச்சியை தொடங்கி விரிவுபடுத்துவதற்கு பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் பகவான் சிங் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிந்து கொண்டு, அவர் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாழ்த்திப் பேசினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே இது ரொம்ப ரொம்ப சிறந்த திட்டம், நிச்சயம் அடுத்த வருடத்தில் இருந்து பஞ்சாப் மாநிலத்தில் இந்தத் திட்டத்தை நான் செயல்படுத்தப் போகிறேன் என்று வாழ்த்திப் பேசினார்.

இப்படி பல்வேறு திட்டங்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலமாகக் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்துக்கு வர வைத்துவிட்டோம். இப்போது பள்ளிக்கூடத்துக்கு வந்த குழந்தைகள் அடுத்து கல்லூரிக்குச் செல்ல வேண்டும். அதனால் அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி சேர்ந்து படித்தால் அந்தக் மாணவனுக்கும், மாணவிக்கும் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்களின் மூலம் ஊக்கத்தொகையாக மாதம் 1,000 நான் கொடுக்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு கிராஸ் என்ரோல்மெண்ட் ரேஷியோ (Gross Enrolment Ratio GER) என்று சொல்வார்கள். உயர்கல்விச் சேர்க்கை விகிதம், பள்ளிக்கூடம் முடித்துவிட்டு எத்தனை பேர் உயர் கல்வி படிக்கச் சென்று சேர்கிறார்கள் அதுதான் ஜி.இ.ஆர் என்று சொல்வார்கள். கிராஸ் என்ரோல்மெண்ட் ரேஷியோ. மற்ற மாநிலங்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால் டபுள் டிஜிட் வருவதே பெரிய சாதனை. 10 சதவிகிதம் வந்தாலே பெரிய சாதனை. இன்றைக்கு தமிழ்நாடு கிட்டத்தட்ட 45 சதவிகிதத்தோடு இன்றைக்கு இந்தியாவிலேயே உயர் கல்விச் சேர்க்கை விகிதத்தில் நம்பர் ஒன் இடத்தில் நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது.

இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு தெலங்கானா மாநிலத்தின் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி வந்தார். அவர் இந்தத் திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டு அந்த மாணவர்களோடு உரையாற்றிவிட்டு, அவர் சொன்னார். தமிழ்நாடு முதலமைச்சர் இது மிக மிக சிறப்பான திட்டம், கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தெலங்கானா மாநிலத்தில் நான் அறிமுகப்படுத்துகிறேன் என்று தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் பாராட்டினார்.

இப்படி மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக இருப்பவர்தான் நம்முடைய முதலமைச்சர், தலைவர் அவர்கள். அந்த முதலமைச்சரை தமிழ்நாட்டுக்குக் கொடுத்தது இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்.

**கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்!**

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத்தொகை கொடுப்போம் என்று நம் தலைவர் அவர்கள் சொன்னார். ஆட்சிப் பொறுப்பு ஏற்றோம். கடும் நிதி நெருக்கடி. அ.தி.மு.க அரசு எவ்வளவு கடன் சுமையில் வைத்துவிட்டுச் சென்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆட்சிக்கு வரும்போது கோவிட் பெருந்தொற்று இரண்டாவது அலை. எவ்வளவு பெரிய சவாலான நிலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றோம் என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் எதிர்க்கட்சிகள் மகளிர் உரிமைத்தொகை கொடுக்க மாட்டார், தி.மு.க அரசு கொடுக்காது, ஏமாத்திட்டார்கள் என்று நம்மை விமர்சித்தார்கள். ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் நம்முடைய தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்தினார். இப்போது மாதந்தோறும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மாதத்துடன் 27 மாதமாக 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு 27,000 ரூபாயை நம்முடைய தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

அதில் சில குறைகள் இருந்தன. இங்கு வந்திருக்கக்கூடிய தாய்மார்கள் முகத்தைப் பார்க்கும்போது எனக்குத் தெரிகிறது. அதைத் தீர்ப்பதற்குத் தலைவர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற முகாம்கள் நடத்தினார். கிட்டத்தட்ட அதில் 30 லட்சம் மகளிர் அதற்கு மீண்டும் விண்ணப்பித்திருக்கிறார்கள். வருகிற டிசம்பர் 12ஆம் தேதியிலிருந்து அந்த விடுபட்ட மகளிருக்கும் சேர்த்து கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கொடுக்கப் போகிறார் நம்முடைய தலைவர் அவர்கள். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில், இந்த விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 60 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை மாதந்தோறும் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த செஞ்சி தொகுதிக்கான திட்டங்கள். இந்தச் செஞ்சி தொகுதியைப் பொறுத்த வரைக்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய கழக அரசு வழங்கி இருக்கிறது. செஞ்சி அரசு கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் வந்தது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான். செஞ்சி பேருந்து நிலையத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டது நம்முடைய ஆட்சியில். செஞ்சி அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டது நம்முடைய ஆட்சியில் தான். செஞ்சி அறிவுசார் மையம் புதிதாகக் கட்டப்பட்டது நம்முடைய ஆட்சியில். அவலூர்ப் பேட்டையில் விளையாட்டு வீரர்களுக்கான மினி ஸ்டேடியம்.

இப்படி உள்கட்டமைப்பு வசதிகளுக்குக் கூடுதல் கவனம் கொடுத்து இந்த செஞ்சி தொகுதிக்கு நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களைச்செய்துகொடுத்திருக்கிறோம்.

**இந்தியாவிலேயே முதல் மாநிலம்!**

இதுமாதிரியான திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு நம்பர் ஒன் மாநிலமாக திகழ்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக அதிக வளர்ச்சி அடைந்த மாநிலமாக, மாநில சராசரி இரண்டு டிஜிட் 11.19 சதவிகிதத்துடன் இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இதையெல்லாம் பார்த்துப் பொறுக்க முடியாத ஒன்றிய பா.ஜ.க அரசு, அதனுடைய அடிமைகள்தான் எப்படியாவது தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது ஒரு தொந்தரவு கொடுக்க வேண்டும், தமிழ்நாட்டு மக்களை எப்படியாவது பழித்தீர்க்க வேண்டும் என்று பல்வேறு வகையில் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். இந்த புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் ஹிந்தி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்